**முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை: திரு. K. ஹரிஹரன், எம்.எல்.,**

**முதன்மை சார்பு நீதிபதி.**

2022ம் வருடம் நவம்பர் மாதம் 24ம் நாள் வியாழக்கிழமை

**அ.வ.எண். 247/2022**

**(CNR No. TNDG070005602022)**

G. மஞ்சுளா ... வாதி

/எதிர்/

1. S.M.ஆனந்தகிருஷ்ணன்
2. ஜெயந்தி ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்னர் 10.11.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திருமதி.ஜி.சபிதா அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகாமலும், பிரதிவாதிகள் அழைத்தும் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், வாதி தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

வாதி, பிரதிவாதியிடமிருந்து பணம் ரூ. 3,23,125/- ம், அசல் தொகை ரூ.3,00,000/-க்கு வழக்கு தேதி முதல் 15 % வட்டியுடன் 1ம் பிரதிவாதியை வழங்க உத்திரவிடக்கோரியும், அல்லர் 2ம் பிரதிவாதியின் சொத்தின் மீது செலுத்தி வைக்க உத்திரவிடக் கோரியும், செலவு தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:**

கடந்த 1.1.2022ம் தேதியில் அவசரநிமித்தமாக 1ம் பிரதிவாதி வாதியிடம் ரூ.3,00,000/- கடன் தொகையினை மாதம் ஒன்றுக்கு 1.25% வட்டி செலுத்துவதாக உறுதியளித்து பெற்றுக்கொண்டதாகவும், அதனை வாதி தேவைப்படும்போது வழங்கிவிடுவதாக

தெரிவித்துவிட்டு அசலையோ, வட்டியையோ 1ம் பிரதிவாதி செலுத்தாமல் இருந்து விட்டார் என்றும், 1ம் பிரதிவாதி பணம் பெறும்போது அதனை உறுதி செய்யும்விதமாக கடனுறுதிச்சீட்டு ஒன்றினை எழுதிக்கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். 1ம் பிரதிவாதியை, வாதி பலமுறை பணம் திருப்பித் தரக்கேட்டும், 1ம் பிரதிவாதி பணத்தைத் திருப்பிச் செலுத்த முன்வராத நிலையில் தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு உரிமைமாற்றம் செய்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். 1ம் பிரதிவாதி அவ்வாறு செய்துவிட்டால் வாதியால் 1ம் பிரதிவாதியிடமிருந்து வசூலிக்க வழியின்றி போய்விடும் என்றும், 2ம் பிரதிவாதிக்கு, 1ம் பிரதிவாதி தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தினை கடந்த 08.02.2022ம் தேதியில் கொடையாக வழங்கியுள்ளார் என்றும், கொடை பெற்றவர் 1ம் பிரதிவாதியின் கடனுக்கு பொறுப்பானவர் என்பதால் 2ம் பிரதிவாதி வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு வழக்கு தொகையினை வசூல் செய்ய வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1, 2 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர்கள் அழைப்பாணையை பெற்றுக்கொண்டுள்ளனர். இருந்தபோதும் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் 1, 2 பிரதிவாதிகளை விடுத்து வழக்கினை ஒருதலைபட்சமாக தீர்மானிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்தது.

4. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு 1 முதல் 3 வரையிலான வாதி தரப்பு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. தீர்வு:**

இவ்வழக்கினை வாதி, 1ம் பிரதிவாதி தன்னிடம் ரூ.3,00,000/- பணம் பெற்றுக்கொண்டு ரூ. 1.5/- வட்டியுடன் திருப்பி செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு கடனுறுதிச்சீட்டு ஒன்றினை எழுதிக்கொடுத்ததாகவும், வாங்கிய கடன் தொகையின் அசலை திருப்பிச் செலுத்த

முன்வரவில்லை என்றும், வாதி தொடர்ந்து 1ம் பிரதிவாதியிடம் பணத்தைக் கேட்டும் அவர் கொடுக்காமல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் தன் தரப்பில் வாதி தன் தரப்பு சாட்சி 1 ஆகவும், கடனுறுதிச்சீட்டின் சாட்சியாக இருந்த ஒரு குணசேகரன் என்பவர் சாட்சி 2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். வா.சா.2 தன் சாட்சியத்தில் தன் முன்னிலையில் தான் 1ம் பிரதிவாதி, வாதியிடமிருந்து கடன் தொகை பெற்றுக்கொண்டதாக சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் வழக்கில் ஆஜராக முன்வராமல் இருந்துள்ள நிலையில், வாதி தனது வழக்கினை மெய்ப்பிக்க வழக்கு அசல் கடனுறுதிச்சீட்டினை தாக்கல் செய்துள்ளார். மேலும் வா.சா.2 ஒரு குணசேகரன் என்பவர் வாதியின் வழக்கை ஆமோதித்து இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே வாதி தரப்பில் வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. மேலும் 1ம் பிரதிவாதியானவர் தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தினை வழக்கு கடனுறுதிச்சீட்டினை எழுதிக்கொடுத்த தேதியான 01.01.2022க்கு பின்னர் 08.02.2022ம் தேதியில் தனது மகளான 2ம் பிரதிவாதிக்கு கொடையளித்துள்ளார் என்றும், சொத்துரிமைமாற்றுச்சட்டம் பிரிவு 128-இன் படி கொடையாளருக்கு கடன் இருக்கும்போது, கொடையாளர் சொத்தினை உரிமைமாற்றம் செய்யும்பட்சத்தில் கொடையாளி அந்தக் கடனை தீர்க்க பொறுப்புடையவர் என்றும், கொடை பெற்றவரிடமிருந்து அந்தக் கடனை வசூல் செய்யலாம் என குறிப்பிட்டு சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 128-இல் கொடையாளியின் கடனுக்கு கொடை பெற்றவர் பொறுப்பாவார் என்று விவரிக்கிறது. இந்நிலையில் வழக்கு கடனுறுதிச்சீட்டு 01.01.2022ம் தேதியில் வாதிக்கு வழங்கப்பட்டதாக வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ளார். மேலும் கடந்த 08.02.2022ம் தேதியில் வாதிக்கு 1ம் பிரதிவாதி கடன் பாக்கி நிலுவையில் இருந்த நிலையில் தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு கொடையளித்துள்ளார். எனவே கடன் தொகை அளவிற்கு சொத்தின் மதிப்பில் இருந்து வாதி தொகையினை கோருவதற்கு உரிமைபெற்றவர் ஆகிறார். எனவே வாதியின் வழக்கை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது. மேலும் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே நடந்த பரிவர்த்தனையானது

வணிக நிமித்தமாக இல்லாத நிலையில் 6% வட்டி மட்டுமே வாதி பிரதிவாதிகளிடமிருந்து பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மேலும் 1ம் பிரதிவாதி வழக்குத் தொகையான ரூ.3,23,125/-ஐ வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் என்றும், மேலும் அசல் தொகையான ரூ.3,00,000/-க்கு 6% வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர் என்றும் இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது. மேலும் 1ம் பிரதிவாதி அந்த தொகையினை செலுத்தத் தவறும்பட்சத்தில் வாதி அதனை 2ம் பிரதிவாதியிடமிருந்து வட்டியுடன் வழக்கு தொகைக்கு அல்லது சொத்தின் மதிப்பு வழக்கு தொகையை விட குறைவாக இருப்பின் சொத்தின் மதிப்பிற்கு தொகை செலுத்தக்கோர உரிமை பெற்றவர் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வழக்கின் செலவு தொகையினை பிரதிவாதிகளிடமிருந்து வாதி பெற உத்திரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் ஒப்பெழுதப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2022ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

K HARIHARAN Digitally signed by K HARIHARAN

முதன்மை சார்பு நீதிபதி,

பழனி.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1. .. ஜி. மஞ்சுளா (வாதி)

வா.சா.2. .. குணசேகரன்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

வா.சா.ஆ.1. 01.01.2022. வாதிக்கு, 1ம் பிரதிவாதி ரூ.3,00,000/-க்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு (வரவு இல்லை) (அசல்)

வா.சா.ஆ.2. 05.03.1999. வழக்குச் சொத்தினை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் (கணிணி சான்று நகல்)

வா.சா.ஆ.3. 08.02.2022. வழக்குச் சொத்தினை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் (கணிணி சான்று நகல்)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>:** இல்லை.

K HARIHARAN Digitally signed by K HARIHARAN

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.